
Table of Contents

Bulletin of The Government Oriental Manuscripts Library, Madras.



அரசினர் கீழ்த்திசைச் சுவடி
நூலகப் பருவ வெளியீடு

EDITED BY

R. N. SAMPATH, M.A., P. & P. A. (Dip.)

Curator, Government Oriental Manuscripts Library, Madras-600005

Volume XX **1972** **Part II**

Published under the authority of Government
Tamil Nadu

© Govt. of Tamil Nadu

Subscription: Rs. 10/- per volume for India
£ 1.00 or
$ 2.50 cents or its equivalent for
foreign countries.

Printed at the Bharati Vijayam Press, Triplicane, Madras-5.

GENERAL EDITOR'S NOTE

With this issue, we complete Twenty Volumes of the Bulletin of the Government Oriental Manuscripts Library and an analysis of all the back numbers shall provide a brake-up figure as follows regarding the different language content.

S. No.	*Language*	*No. of works published*
1.	English	1
2.	Islamic Languages	14
3.	Kannada	21
4.	Malayalam	22
5.	Maharastri	7
6.	Sanskrit	32
7.	Tamil	61
8.	Telugu	28

So far each Volume had carried two issues. The Bulletin was started in August 1948 and it has completed 24 years of existence with the ending of the calendar year 1972. In this period of 24 years, correspondingly twenty-four Volumes must have been published. Readers might remember that in the first part of this Volume, I had expressed a hope to publish a COMMEMORATION volume synchronizing with the completion of 25 years in the year 1973. So to fill up the gap it is proposed to bring out four full Volumes before September 1973–and our subscribers are requested to note this and make suitable adjust ments (Intimations with a request for budgetary adjustments sent separately).

This issue contains the pending portions of the works in Tamil and Sanskrit that were started earlier. The Siddhanta-saravali has been started in the first part of *seventeenth* Volume and has been completed in *7* issues. This is an important Saiva-gama work and this publication in full many be of much use to the performing priests of Siva temples with regard to the various rituals of temple-worship and also to the scholars and research workers in the field of Agama and Silpa sastras. The Tamil work

Arungalaccheppu is a fine treatise regarding the Jain tenents told in aphoristic style and commented upon in a manipravala manner for which the Jains and Buddhists of Tamil Nadu were noted. I only wish that some scholar takes up into his heart to translate the original text and commentary into English or Hindi for the benefit of larger circle of readers.

A minor poem of four stanzas in Tamil by an unknown author speaks eloquently about the importance of Gnānayoga over the Karmayoga. The poem is short yet effectively presents what it means.

Sri Kṛṣṇa in his Bhagavatgīta has enunciated three mārgas for attaining one's salvtaion. Having indicated the first two viz. Karma and Gnānamārgas, we now present the third method viz. Bhakti. Kṛṣṇa - Bhakti is unique in this realm and we also publish here a small composition—a stotra of five verses on Sri Krishna of Guruvayur. From the tenor of the stotra, it may be clear that the anonymous author had suffered from Rheumatic or some kind of gaseous trouble (Vatadosa) for which the petition has been made to the Lord for the relief. We feel happy to bring this hitherto unknown piece of Stotra to the knowledge of Scholars who are familiar only with Narayaniyam of Narayana Bhatta.

The remnant of the Bṛhadyātrā work also gets published in this issue and it is our hope that this may be received well by all the scholars. Incidentally I may mention that the next Volume—i.e. XXI—shall carry a critical work in Tamil Language for which Thiru M. Arunachalam of Thiruchitrambalam of Tanjore District has agreed to help us in editing "Prabandhamarabiyal"—a treatise on Tamil compositions.

R. N. Sampath

Curator & General Editor.

அருங்கலச் செப்பு

(தொடர்ச்சி Vol. XX—பக்கம் 32)

(நல்லொழுக்கம்)

62. காட்சி யுடையார் வினைவரும் வாயிலின்
மீட்சிய நல்லொழுக்கி னற்கு.

காட்சி யுடையார்—सम्यक्त्व த்தை யுடைத்தானபேர்
வினைவரும் வாயிலின் மீட்சியா—कर्म ங்கள் வருகிற வழி யினாலே
कर्म ங்கள் வராமற் றடைபண்ணுகிறது
நல்லொழுக்கினற்கு—நல்ல सम्यक्चारित्र மென்று சொல்லப் படும்.

(சுஉ)

(நற்காட்சியும் நன்ஞானமுமாகிய மறைகளில் தெளிந்த சான்றோர்கள், தங்களைத் தீவினைகள் அணுகாதவாறு தடுத்துக் கொள்ளும் திறன் கைவரப் பெறுவதற்குக் காரணம் அவர்கள்தம் நல்லொழுக்க நெறிகளேயாகும் என்று கூறப் பெறும்.)

(நல்லொழுக்க வகை)

63. குறைந்ததூஉ முற்ற நிறைந்ததூஉ மாக
வறைந்தா ரொழுக்க மிரண்டு.

குறைந்ததூஉ—अणुव्रत ம்
முற்ற நிறைந்ததூஉமாக—महाव्रत மென்றும்
வறைந்தாரொழுக்க மிரண்டு—चारित्र மிரண்டு प्रकार மென்று சொன்னாரென்பதாம்.

(சுரு)

(சான்றோர்கள் கைக்கொள்ளும் ஒழுக்கங்கள், கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறனில்விழையாமை, பெரும் பொருள் விரும்பாமை, பிரமசரியம், தவம், கள், ஊன்,

தேன் முதலியன உண்ணுமை, இரவு உண்ணுமை போன்ற வற்றை மேற்கொள்ளும் 'அணுவிரதம்', 'மாவிரதம்' என இரண்டுவகையாகும் என்று கூறுவர்.)

64. நிறைந்த திருவடிகட் காகு மனையாற்
கொழிந்தது மூன்று வகைத்து.

நிறைந்த திருவடிகட்காகும்—महाव्रत ம் ऋषि களுக்காகும்
மனையாற் கொழிந்தது—गृहस्त ருக்கு மீந்தது
மூன்று வகைத்து—अणुव्रत, गुणव्रत, शिक्ष என மூன்று வகை யாகும்.

(சுச)

(கொலை, பொய், களவு, காமம், பொருள் ஆகியவற்றினைத் துறத்தலாகிய மாவிரதம் என்பது முனீசுவரர்களுக்குக் கூறப்பெற்றதாகும். இல்லறத்தாருக்குக் கூறப்பெற்றனவாகிய பிறவிரதங்கள் அணுவிரதம், குணவிரதம், சிட்சா விரதம் என மூன்று வகையாம் என்பர்.)

(இல்லறத்தாருக்குரிய விரதங்கள்)

65. அணுவத மைந்துங் குணவத மூன்று
முணர்நான்கு சிக்கா வதம்.

அணுவதமைந்தும் - अणुव्रत ம் ரு
குணவத மூன்றும் - गुणव्रत ம் ௩
உணர் நான்குஞ்சிக்கா வதம்—शिक्षाव्रत நான்கு प्रकार மென்றறிவது.

(சுரு)

(மேலே கூறப்பெற்றவையும் இல்லறத்தாருக்குரியவையுமான மூன்று விரதங்களுள் முதலாவதான அணுவிரதமென்பது, விலக்க வேண்டுவன வாகிய கொலை, களவு, பொய், காமம், பொருள்வரைதல் என்னும் ஐந்து வகைகளையும் இரண்டாவதான குணவிரதம் என்பது, காக்க வேண்டுவன வாகிய திசைவிரதம், அனர்த்ததண்டவிரதம், போக உபபோக பரிமாண விரதம் என்ற மூன்று வகைகளையும் மூன்றாவதான சிட்சாவிரதம் என்பது; சாமாயிக விரதம், போசதவிரதம், தேசாவகாசிக விரதம், அதிதிசம்விபாக

விரதம் என்ற நான்கு வகைகளையும் கொண்டவை என்று கூறுவர்.)

(அணுவிரதம் ஐந்து)

66. பெரிய கொலைபொய் களவோடு காமம்
பொருளை வரைதலோ டைந்து.

பெரியகொலை—ஊரப்பட்ட ஜீவனைக் கொல்லேனென் கிற பெரிய கொலையும்

பொய்—குடிகேடு பழிகேடான பொய் சொல்லேனென் கிற பெரிய பொய்யும்

களவோடு—अन्य ருடைமையைக் கன்னமிட்டுத் திருடே னென்கிற பெரிய களவோடும்

காமம்—परदार த்துக்குச்சியாத பெரிய காமமும்

பொருளை வரைதலோடைந்து—क्षेत्र முதலான परिग्रह த்தை மட்டு பண்ணுகிற பொருளை வரைதலோடே கூட अणुव्रत மைந்து प्रकार மாம்.

(சாசா)

(இயங்கும் உயிர்கள் எவற்றையும் கொல்லேனென நோற்கும் '**கொல்லாமை**', குடிக்கு அழிவையும் பழியையும் தேடித்தருகின்ற பொய்யினைச் சொல்லேனென உறுதி பூணும் '**பொய்யாமை**', பிறருக்கு உரிமையாம் பொருள்களைக் கன்னமிட்டுக் கவரேனெனும் பண்பு கொள்ளும் '**கள்ளாமை**', பிற பெண்களை உள்ளத்தாலும் விரும்பேனெனும் தன்மை யோடு வாழுகின்ற '**பிறனில் விழையாமை**', பெரும் பொருளை ஈட்ட வேண்டுமென்கின்ற அவாவினைக் குறைத்து வாழும் '**மிகுபொருள் விரும்பாமை**', ஆகிய ஐந்துவகை விரதங்களுமே அணுவிரதம் என்று கூறப்பெறுவனவாம்.)

(கொல்லாமை)

67. இயங்குயிர் கொல்லாமை யேவாமை யாகும்
பெருங்கொலையின் மீட்சி யெனல்.

இயங்குயிர்க் கொல்லாமை—ஊரப்பட்ட ஜீவனைக் கொல்லாததும்

யேவாமையாகும்—அன்னியரை ஏவிக்கொல்லுவியாத
துமான
பெருங்குலேயின் மீட்சியெனல்—ஊரப்பட்ட ஜீவனைக்
கொல்லேனென்கிற பெரிய
கொலேயான व्रत மாம்.

(சுஎ)

(இயங்குந் தன்மை வாய்ந்த எவ்வுயிரையுங் கொல்லா தொழிதலும் பிறரை ஏவி அவ்வுயிர்களைக் கொல்லுமாறு செய்யாதிருத்தலும் ஆகிய இவையே அணுவிரத வகைகளுள் முதலாவதாகிய 'கொல்லாமை' என்கின்ற விரதமாகும்.)

(கொல்லாமையை மீறிய செயல்கள்)

68. அறுத்த லலேத்த லடைத்தலோ டார்த்த
லிறப்பப் பொறையிறப்போ ரைந்து.

அறுத்தல்—காதை அறுக்கிறது முதலானதும்
அலேத்தல்—அடிக்கிறது முதலானதும்
அடைத்தல்—பத்து மாடு இருக்கிற இடத்திலே இருபது
மாட்டை उपद्रव மாக அடைக்கிறதும்
ஆர்த்தல்—கட்டுகிறதும்
இறப்பப் பொறையிறப்போ ரைந்து—अधिक மான भार
த்தை ஏற்றுகிறது என்னும்
கொல்லா व्रत த்துக்கைந்த
தீசாரமாகும்.

(சுஅ)

இறப்பதிசாரம்.

(பிற உயிர்களின் காது முதலான உறுப்புகளை அறுப்பது, அவற்றை அடித்துத் துன்புறுத்துவது, சிறிதளவான இடத்தில மிகுதியான உயிர்களை அடைத்து வைப்பது, அவற்றைக் கட்டிவைத்துத் துன்புறுத்துவது, மிகுதியான சுமையை அவற்றின்மீது ஏற்றிவைத்து வதைப்பது ஆகிய இவை ஐந்தும் கொல்லாமை என்கின்ற விரதத்தை மீறி செய்யப் பெறுகின்ற செயல்களாம்.)

(பொய்யாமை)

69. **பாவம் பெரியன சொல்லாமை யேவாமை**
யாகு மிரண்டா வதம்.

பாவம் பெரியன சொல்லாமை—पाप த்துக்குக் காரணமான பெரிதான பொய்யைத் தான் சொல்லாததும்

யேவாமையாகு மிரண்டா வதம்—அன்னியரைக் கொண்டு பொய் சொல்லு வியர்த்துமான பொய் சொல்லேனென்கிற இரண்டா மணு व्रत மாம்.

(சுகூ)

(தீவினைப் பயன்களுக்குக் காரணமாக விளங்குவதும் தனக்கும் பிறருக்கும் துன்பத்தை விளைவிப்பதுமான பொய்யினை எக்காரணத்தைக் கொண்டும் தான் சொல்லாமலிருப்பதும், பிறரை அப்பொய்யினைச் சொல்லச் செய்யாமலிருப்பதுமாகிய செயல்கள் அணுவிரத வகைகளுள் இரண்டாவதாகிய 'பொய்யாமை' என்னும் விரதமாகும்.)

(பொய்யாமையை மீறிய செய்ல்கள்)

70. **குறளை மறைவிரி யில்லடை வெளவல்**
புறவுரை பொய்யோலை கேடு.

குறளை—स्नेह மான பேரை भेदि ச்சுக் குறைக்கிறது

மறைவிரி—स्त्रीपुरुष एकान्त रहस्य மாயிருக்கிற द्रव्य த்தை நாலுபேரு மறிய விரித்துச் சொல்லுகிறதும்

யில்லடை வெளவல்—ஒருத்தர் வைத்த த்தை எடுத்துக் கொண்டு இல்லையென்று வாயடிக்கிறதும்

புறவுரை—குண்டணியான मिथ्योपदेश த்தை பண்ணுகிறதும்

பொய்யோலை கேடு—ஒருத்தரோடே சொல்லாமல் பொய்யோலை எழுதி காரியமாகப் பண்ணுகிறது மென்னும் பொய்சொல்லா द्रव्य த்துக்கு ஐந்ததீசாரமாம்.

(எ0)

(சிறந்த நண்பர்களாக விளங்குபவர்களின் நட்பினைக் கெடுத்துப் பிரிப்பது, ஆணும் பெண்ணுமாய்த் தனித்திருப்பவர்களின் செயல்களைக் குறித்துப் பலருமறியுமாறு எடுத்துச் சொல்லுவது, ஒருவருக்கு உரித்தான பொருள்களைக் கவர்ந்துகொண்டு இல்லை என மறுத்துரைப்பது, தனக்கும் பிறருக்கும் தீமையைத் தருகின்ற கோள் சொல்லுதல் போன்ற பொய்யான கருத்துக்களைப் பிறருக்குச் சொல்லித் தருவது, பிறருக்குத் தெரியாமல் பொய்யோலை எழுதி அதனால் நடைபெற வேண்டிய செயல்கள் நடக்குமாறு செய்வது ஆகிய இவ்வைந்தும் 'பொய்யாமை' என்னும் விரதத்தை மீறி செய்யப்பெறுகின்ற செயல்களாம்.)

(கள்ளாமை)

71. கொடாதது கொள்ளாமை யேவாமை யாருங்
கொடாதது கொள்ளா வதம்.

கொடாதது கொள்ளாமை—ஒருத்தர்குடாத த்தைத் தான் கொள்ளாததும்
யேவாமையாகும்—ஒருத்தரை யேவி திருடச் சொல்லாததும்
கொடாததுகொள்ளாவதம்—குடாததுகொள்ளேனென்கிற திருடா வ்ரதமென்பதாம்.

(எக)

(ஒருவர் தாமாகக் கொடுக்காத பொருள்களைத் தமக்கு உரியதாகக் கவர்ந்து கொள்ளாமலிருப்பதும் பிறர் பொருளைத் திருடிவருமாறு தூண்டி ஒருவரையும் ஏவாமலிப்பதுமாகிய செயல்களே அணுவிரத வகைகளுள் மூன்றுவதாகிய பிறர் கொடாததைக் கொள்ளேனென்கின்ற "கள்ளாமை" என்னும் விரதமாகும்.)

(கள்ளாமையை மீறிய செயல்கள்)

72. குறைவு நிறைகோடல் கொள்ளைக் கவர்தல்
மறைய விருத லிறப்பு.

குறைவு நிறைகோடல்—சின்னமரக்கால் முதலானத்தினாலே குறைய குடுத்து பெரிய மரக்

காலம் முதலானத்திஞலே வாங்கிக் கொள்ளுகிறதும்
கொள்ளைக் கவர்தல்—ராச்சிப் பல்லட்டத்தினுல் வந்த வை வாங்கிக் கொள்ளுகிறதும்
மறையவிருதலிறப்பு—பொன்னினுள் வெள்ளியும் நெய் யினுளெண்ணெயும் பாலினுள் தண்ணீ ரும் உப்பினுள் மணலும் நெல்லினுள் பதறு முதலானவை மறைப்பதும் அதீ சாரமாம்.

(எஉ)

(பிறருக்குக் கொடுக்கின்றபோது சிறிய அளவைக் கருவிகளைக் கொண்டு குறைவாக அளந்து கொடுப்பது, பிறரிடமிருந்து தான் பெறுகின்றபோது பெரிய அளவைக் கருவிகளைக் கொண்டு நிறைய அளந்து பெறுவது, பிறரை ஏமாற்றிக் கவர்ந்து வந்த பொருள்களை வாங்கிக் கொள்ளு வது, பொன்னெடு வெள்ளி, நெய்யொடு எண்ணெய், பாலொடு தண்ணீர், உப்பொடு மணல், நெல்லொடு பதர் போன்றவற்றைக் கலந்து கொடுப்பது ஆகிய இம்மூன்று செயல்களும் 'கள்ளாமை' என்னும் விரதத்தை மீறி செய் யப் பெறுகின்ற செயல்கள் என்பர்.)

73. கள்ளரோடு கூறல் கள்ளர் குணர்பொருளை
யுள்ளினுற் கோடலோ டைந்து.

கள்ளரோடு கூறல்—கள்ளரை ஏவித் திருடிவரச் சொல்லுகிறதும்
கள்ளர் குணர் பொருளை—கள்ளர் திருடிவந்த பொருளை
யுள்ளினுற் கோடலோ டைந்து—மனதிலே சிந்திச்சுக் கொள்ளுகிறது திருடனென்கிற வ்ரத்துக்கு ஐந்ததீசாரமாகும்.

(எந)

(மேலே கூறிய மூன்று செயல்களோடு திருடிவருமாறு கூறிக் கள்ளரைத் தூண்டியனுப்புவது, அவர்கள் திருடிக் கொணர்ந்த பொருள்களைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டுமென்று உள்ளத்தால் நினைப்பது ஆகிய

இரண்டும் சேர்ந்த ஐந்து செயல்களும் 'கள்ளாமை' என்னும் விரதத்தை மீறி செய்யப் பெறுகின்ற செயல்களாம்.)

(பிறனில் விழையாமை)

74. விதித்த வழியின்றிக் காம னுகர்தல்
மதிப்பின்மை நான்கா வதம்.

விதித்த வழியின்றிக் காமனுகர்தல்—குரு, தாய், தந்தை பெந்துக்கள் முதலான பேர் साक्षि யாக பண்ணின வழியை விட்டுக்காம மனுபவிக்கிறது

மதிப்பின்மை நான்கா வதம்—மனதிலே மதியாமல் விட்டு நடக்கிறது ब्रह्मचर्य மென்னும் நாலாவதான व्रत மென்பதாம்.

(எச)

(தாயுந் தந்தையும் குருவும் சுற்றமும் போன்ரோர் ஆகிய பலர் முன்னிலையில் நடைபெற்ற வழியினை விட்டுப் பிறவழிகளில் இன்பந் துய்ப்பதாகிய செயலை உள்ளத்தாலும் நினையாது ஒழுகுவதே அணுவிரத வகைகளுள் நான்காவதாகிய, உள்ளத்தைக் கட்டுப்படுத்தும், பிரமசரியம் என்று கூறப்பெறுகின்ற, 'பிறனில் விழையாமை' என்னும் விரதம் ஆகும்.)

(பிறனில் விழையாமையை மீறிய செயல்கள்)

75. அனங்கன் விளையாட்டு வேட்கை மிகுதி
மனங்கொள் விளரின்மை கேடு.

அனங்கன் விளையாட்டு—அங்கமில்லாத விடத்திலே क्रीडிக்கிறதும்

வேட்கை மிகுதி—ஆசை மிகுதியா யிருக்கிறதும்

மனங்கொள் விளரின்மை கேடு—चुम्बनादिविकार த்து மனஸிலே चिन्ति யாயிருக்கிறதும் अतिचार மாம். (எரு)

(உருவமற்றவன் என்று கூறப்பெறுகின்ற மன்மதனது வழியில் மூழ்கிக் காமநூலின் வழிவிளையாடுவது, இன்பநுகர்ச்சியில் மிகுதியான விருப்பங் கொண்டிருப்பது, இதழ் சுவைத்

தலும் உடற்றழுவலும் போன்ற உள்ளவிருப்பங்களிலே எக்காலமும் நினைவு மாறாமல் இருப்பது ஆகிய மூன்று செயல்களும் 'பிறனில்விழையாமை' என்னும் விரதத்தை மீறி செய்யப்பெறுகின்ற செயல்களாம் என்பர்.)

76. பிறர்மணங் கோடல் பிறர்க்குச் செல்வாளைத்
திறவதிற் கோடலோ டைந்து.

பிறர் மணங் கோடல்—பிறருக்குப் பண்ணுகிற கல்லியாணத்தினை விலக்கித்தான் கொள்ளுகிறதும்

பிறர்க்குச் செல்வாளைத்திறவத்திற்கோடலோ டைந்து — पुरुष னுண்டாகிலும்-சுவயிராசாரியும்-வேசியையும்-விதவையும் दासि யு மென்னும் அவரைச் சேருகிறதும் ब्रह्मचर्य த்துக்கைந்ததீசாரமாம்.

(எசு)

(மேலே கூறப் பெற்ற முச்செயல்களோடு, பிறருக்குச் செய்கின்ற திருமணத்தினை விலக்கி, அம்மணத்தினைத் தானே செய்துகொள்ளுவது, கொண்டவனிருக்க அவனை விடுத்துத் தன் விருப்பம்போல் ஒழுகித்திரிபவள், செல்வத்தை விரும்பிப் பலரிடமும் வந்து அடையும் பரத்தை, கணவனை இழந்தவள், பணிபுரிய வந்தவள் போன்ற பிற பெண்களை அடைவது ஆகிய இரண்டும் சேர்ந்த ஐந்து செயல்களும் 'பிறனில் விழையாமை' என்னும் விரதத்தை மீறி செய்யப்பெறுகின்ற செயல்களாம் என்பர்.)

(மிகுபொருள் விரும்பாமை)

77. பொருள்வரைந் தாசைச் சுருக்க லேவாமை
யிருடீர்ந்தார்க் கைந்தா வதம்.

பொருள்வரைந் தாசைச் சுருக்கல்—क्षेत्र वास्तु முதலான वस्तु व्रत ம் பண்ணியிருக்கிற वस्तु விலேயும் ஆசையை விடுகிறதும்

யேவாமை—அன்னியருக்கு परिग्रह த்தை யேவாமை
யிருடீர்ந்தார்க்கைந்தாவதம் — रात्रिभोजन த்தை விட்ட்
பேருக்கு परिग्रहव्रत மென்னு
மைந்தா व्रत மாம்.

(எஎ)

(நிலம், வீடு முதலிய பொருள்களில் பேராசை கொள்ளாமல், தன்னிடம் உள்ள பொருள்களிலேயும் மிகுதியான பற்று கொள்ளாமல், அவாவினைக் குறைத்து வாழ்வதும் தங்கட்குத் தேவையான பொருள்களைக் காட்டிலும் மிகுதியான பொருளை விரும்பி ஈட்டுமாறு பிறரை ஏவாமலிருப்பதுமே இரவு உண்ணும் வழக்கத்தைத் துறந்து விளங்குபவர்களுக்கு உரியதாகிய அணுவிரத வகைகளுள் ஐந்தாவதாகக் கூறப்பெறும் ‘மிகுபொருள் விரும்பாமை’ (பொருள் வரைதல்) என்னும் விரதம் ஆகும்.)

(மிகுபொருள் விரும்பாமையை மீறிய செயல்கள்)

78. இயக்கமோ டீட்டம் பெருக்க லுலோபம்
வியப்பு மிகைகோட லைந்து.

இயக்கமோ டீட்டம் — प्राणि களின் श्रम த்தை யறியாதே
ஏறிச் செல்லுமியக்கமும் தன்னால்
शक्य மல்லாத कार्य த்தினைத் துடங்கு
மீட்டமும்

பெருக்கல்—सङ्ग्रह ஞ் செய்து धान्य ங்களில் திரள ஜீவன்
கள் பிறக்குமளவும் வைத்துப் பெருக்குவதும்

உலோபம்—योग्य மாகிய दान த்தினைக் கொடாத அதி
லோபமும்

வியப்புமிகைகோடலைந்து—பிறர் ऐश्वर्य த்தைக் கண்டு आश्चर्य ப்
படுகிறது மென்னும் परिग्रह த்துக்
கைந்த தீசாரமாகும்.

(எஅ)

(பிற உயிர்களின் துன்பத்தை யறியாமல் அவற்றின் மீது அமர்ந்து அவற்றைச் செலுத்துதல், பொருளாசை கொண்டு, தன்னால் முடிக்க இயலாத செயலினை மேற்கொள்ளத் தொடங்குதல், தாம் ஈட்டிய தானியங்களில் மிகுதியான

புழு முதலியன உண்டாகுமளவும் அவற்றை மேலும் மேலும் சேர்த்து வைத்தல், எவ்விதமான அறமும் செய்யாமல் பொருளைப் பாதுகாக்க வேண்டுமென்று பேராசை கொள்ளுதல், பிறருக்குச் சொந்தமான செல்வத்தைப் பார்த்து வியப்படைதல் ஆகிய ஐந்து செயல்களும் 'மிகுபொருள் விரும்பாமை' என்னும் விரதத்தை மீறி செய்யப் பெறுகின்ற செயல்களாம்.)

(அணுவிரதங்களின் பயன்)

79. அய்யைந் திறப்பிகந் தைந்து வதங்களுஞ்
செய்யுஞ் சுவர்க்கச் சுகம்.

அய்யைந்திறப்பிகந்தைந்து
வதங்களும்—ஒவ்வொன்றுக் கைந்தாக अणुव्रत மைந்துக்கும் இருபத்தைந்து भेद மான अतीचार மில்லாமல் अनुष्ठि க்கப்பட்ட ஐந்து व्रत ங்களும்
செய்யுஞ் சுவர்க்கச்சுகம்—स्वर्गस्थसुखव्रत த்தைப்பண்ணுமென்பதாம்.

(எக)

(கொலை, பொய், களவு, காமம், பொருள் வரைதல் என்ற அணுவிரத வகை ஒவ்வொன்றிற்கும் மீறிய செயல்களாகக் கூறப்பெற்ற ஐந்து ஐந்து செயல்கள் சேர்ந்த இருபத்தைந்து வகையான விரதத்தை மீறிய செயல்களும் இல்லாமல் கடைப்பிடிக்கப்பெற்ற ஐவகை விரதங்களுமே ஒருவன் பெற வேண்டிய பேரின்பத்தை யளிக்கும் என்று கூறுவர்.)

(விரதங்களால் புகழ்பெற்றோர்)

80. சட்டி தனதேவன் பாரீச னீலியைப்
பெற்றார் சயனுஞ் சிறப்பு.

சட்டி—கொல்லாத व्रत த்துக்கு சட்டிப் புலையனும்
தனதேவன்—பொய் சொல்லா धन த்துக்கு देव னும்
பாரீச—திருடாத व्रत த்துக்கு पारिषेण कुमार னும்
நீலியே—ब्रह्मचर्य த்துக்கு பனி नील நங்கையும்

பெற்ருர் சயனுஞ் சிறப்பு—परिग्रहव्रत த்துக்கு जयकुमार னும்
ராஜா க்களாலும் देव ர்களாலும்
பூஜை யைப் பெற்ருரென்பதாம்.
(அ0)

(அணுவிரத வகைகளுள் முதலாவதாகிய 'கொல்லாமை' என்னும் விரதத்திற்குச் சட்டிப்புலேயன் என்பானும் இரண்டாவதாகிய 'பொய்யாமை' என்னும் விரதத்திற்குத் தனதேவன் என்பானும் மூன்ருவதாகிய 'கள்ளாமைக்குப் பாரிசேண குமாரன் என்பானும் நான்காவதாகிய 'பிரமசரியம்' என்னும் விரதத்திற்குப் பனிநீல நங்கை என்பாளும் ஐந்தாவதாகிய 'பொருள் வரைத' லுக்குச் செயகுமாரன் என்பானும் ஆகிய இவர்கள் சிறந்த சான்ருக விளங்கி மன்னர்களாலும் தேவர்களாலும் சிறப்பித்துப் போற்றப் பெற்றனர்.)

(விரதமின்மையால் அழிவுற்ருேர்)

81. தனசிரி சத்தியன் தாபதன் காப்பான்
நினைதாடி வெண்ணெ யுரை.

தனசிரி—धनश्री யும்
சத்தியன்—सत्यघोष னும்
தாபதன்—உறிதா पस னும்
காப்பான்—தளவரனும்
நினைதாடி வெண்ணையுரை—தாடி வெண்ணைக்காரனும்
கொலை முதலாகிய अणुव्रत மைந்து
மில்லாமல் दुर्गति யை யடைந்த
துக்கு दृष्टान्त மாகச் சொல்லிக்
கொள்வது.
(அக)

(மேலே கூறப்பெற்ற கொலை முதலாகிய அணுவிரத வகை ஐந்தினையும் மேற்கொண்டொழுகாதவர்கள் அவலநிலை யடைந்து, தாழ்ந்து அழிவர் என்பதற்குத் தனஸ்ரீ, சத்திய கோஷன், உறிதாபதன், தளவரன், தாடிவெண்ணெய்க் காரன் ஆகிய ஐவரின் அழிவு நிலைகளையே எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.)

(மூலகுணம்)

82. **கள்ளொடு தேன்புல் சுண்ணுமை ஐவதமுந்**
தெள்ளுங்காண் மூல குணம்.

கள்ளொடு தேன்புல் சுண்ணுமை—கள்ளோடே கூட தேனும் मांस மும் भोजि யாமல்
ஐவதமும் தெள்ளுங்காண் மூலகுணம்—अणुव्रत மைந்துங் கூட विचारि த்துப் பார்க்குமளவி லெட்டும் श्रावक ருக்கு मूलगुण மாம்.

(அஉ)

(கள் உண்ணுமை, தேன் உண்ணுமை, புலால் உண்ணுமை ஆகிய மூன்று குணங்களையும் சேர்த்துப் பார்க்குமளவில், மேலே கூறப்பெற்ற ஐவகை அணுவிரதங்களோடு கூடிய எட்டு குணங்களும் சமண தருமத்தைக் கைக்கொள்ளும் இல்லறத்தாருக்குரிய மூலகுணங்கள் என்று கூறத் தகுந்தனவாம்.)

(திக்குவிரதம்)

83, **வரைப திசைபத்தும் வாழு மளவும்**
புரைவின் றிசைவிரத மென்.

வரைபதிசை பத்தும்—நாலு திக்குகளிலும் நாலு மூலையிலும் கீழ்மேலுமாக பத்து திசைக்கும் जन्मपर्यन्तम् व्रतம் பண்ணி நடந்து கொள்ளுகிறது
வாழுமளவும் புரைவின்றிசை விரதமென்—आयुष्यपर्यन्तं குற்றமில்லாமல் व्रत த்தை अनुष्ठि க்கிறது दिक्कुव्रत மென்பதாம்.

(அங)

(கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற நான்கு திசைகளோடு கோணதிசைகள் என்று கூறப்பெறும் வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு ஆகிய நான்கு திசைகளும் கீழும் மேலுமாகிய இரண்டும் சேரவிளங்கும் பத்து திசைகளிலும் வாழ்நாள் முழுமையும் குறிப்பிட்ட

எல்லையைக் கடந்து செல்லேன் என்ற விரதம் பூண்டு நடந்து கொள்ளுவதும் உடலில் உயிர் வாழுமளவும் சிறிதும் குற்ற மேற்படாவண்ணம் அவ்விரதத்தினைக் கடைப்பிடித்து ஒழுகி வருவதும் 'திக்குவிரதம்' என்று கூறப்பெறும்.)

(திக்குவிரதத்திற்காம் எல்லைகள்)

84. ஆறு மலையுங் கடலு மடவியுங்
கூறுப வெல்லை யதற்கு.

ஆறு—ஆறு पर्यन्त மும்
மலையும்—மலை पर्यन्त மும்
கடலும்—समुद्रपर्यन्त மும்
அடவியும்—காடு पर्यन्त மும்
கூறுபவெல்லையதற்கு—दि க்கு व्रत த்துக்கு प्रमाण ஞ் சொல்லப்பட்டதாம்.

(அச)

(வாழ்நாள் முழுமையும் பத்து திக்குகளிலும் 'குறிப்பிட்ட எல்லையைக் கடந்து செல்லேன்' என்றுமேற்கொள்ளுகின்ற விரதமாகிய திக்கு விரதத்திற்கு ஆறும் மலையும் கடலும் காடும் ஆகிய இயற்கைப் பொருள்களே எல்லைகளாகும் என்று கூறுவர்.)

(மாவிரதம்)

85. எல்லைப் புறத்தமைந்த பாவமு மீண்டமையிற்
சொல்லுப மாவத மென்று.

எல்லைப்புறத்தமைந்த பாவமு மீண்டமையிற்—दिक्कुव्रत ம் பண்ணப்பட்டப் புறம்பான தேசத்திலே ஐந்துவகை பாவமில்லாதபடியினாலே
சொல்லுபமாவதமென்று—அதுக்கப்பால் महाव्रत மென்று சொல்லப்படும்.

(அரு)

(திக்கு விரதத்திற்கு எல்லையாகக் கூறப்பெற்ற ஆறு, மலை, கடல், காடு ஆகியவற்றிற் கப்பாலுள்ள இடங்களில் கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிரமசரியம் பொருள்வரைதல் ஆகிய ஐந்து வகையான ஒழுக்கங்களைக்

கடைப்பிடித் தொழுகாவிடில் அதனுலேற்படும் பாவம் இல்லை யாதலினுலே அவ்விடங்களிலும் விரதம் பூண்டொழுகும் ஒழுக்கம் ' மாவிரதம் ' என்று சொல்லப்பெறும்.)

(மாவிரதம் ஐந்து)

86. சிறிய கொலைபொய் களவோடு காமம்
பொருளைத் துறத்தலோ டைந்து.

சிறிய கொலைபொய்களவோடு காமம்—கொஞ்சமான एकेन्द्रिय ஜீவன் முதலானத்தைக் கொல்லேனென்கிறதும் சிறிய கொலை சிறிய பொய் சிறிய களவு சிறிய காமத் தோடே கூட

பொருளைத்துறத்தலோடைந்து—सकलपरिग्रह த்தையும் விடு கிறது महाव्रत மைந்தாம்.

(அகூ)

(இயங்கும் உயிர்கள் எவற்றையும் கொல்லேனென நோற்கும் நோன்பாகிய 'கொல்லாமை' முதல் 'மிகு பொருள் விரும்பாமை' ஈருன ஐவகை அணுவிரதங்களைத் தவிர ஓரறிவு உயிர்போல்வனவற்றைக் கொல்லும் **சிறிய கொலை,** யாருக்கும் தீங்கிழைக்காத **சிறிய பொய், களவு, காமம்** ஆகியவற்றையும் செய்யேன் என்பதோடு தேவை யான பொருளின்மீது ஏற்படும் **பற்று** முதலியவற்றையும் அறவேவிட்டு ஒழுகுவதாகிய ஐவகை ஒழுக்கங்களும் 'மாவிரதம்' என்று கூறப்பெறும்).

(மாவிரத ஆட்சி)

87. கொலைமுதலா வைந்தினையு முற்றத் துறத்தல்
தலையாய மாவத மாம்.

கொலைமுதலாவைந்தினையு முற்றத்துறத்தல்—கொலை முதலான ஐந்து த்தையும் साकल्य மாக वत ம் பண்ணி நடக்கிறது

தலையாய மாவதமாம்—श्रेष्ठ மான महाव्रत மென்பதாம்.

(அஎ)

(மேலே கூறப்பெற்ற சிறிய கொலை முதலாகிய ஐந்து விரதங்களையும் முழுமையாகக் கைக்கொண்டு அவற்றிற்குச் சிறிதும் குறைவு ஏற்படாதவாறு விரதம் மேற்கொண்டு ஒழுகிவருவதே மிகச்சிறந்த, தலையாய 'மாவிரதம்' என்று கூறப்பெறுவதாகும் என்பர்.)

(திக்குவிரதத்தை மீறிய செயல்கள்)

88. **இடம்பெருக்க லெல்லை மறத்தல் கீழ்மேலோ**
டுடனிறுத்தல் பக்க மிறப்பு.

இடம் பெருக்கல்—தான் கையிகொண்ட நாட்டு யோஜனையை விட்டு अन्यदेश த்து யோஜனையினாலே பெருக்கச் செய்வதும்

எல்லை மறத்தல்—தான் व्रत ம் பண்ணின எல்லையை மறப்பதும்

கீழ்மேலோடுடனிறுத்தல்

பக்கமிறப்பு—வரைவு பண்ணின वारि முதலானவத்திலிழிவதும் மலைமுதாலானவத்தி லேறுவதும் வித்திசைகளிற் பொவதிரியக் கதிக்கிறமு மென்னுந் திக்குவிரதத்துக் கைந்ததீசாரமாகும். (அஅ)

('பொருள் வரைதல்' என்ற அறத்திற்கேற்பத் தனக்கு வரையறுக்கப்பெற்ற நில அளவினை மீருதிருக்கத் தான் கைக்கொண்டுள்ள நாட்டின் அளவாகிய 'யோசனை' அளவினை விடுத்து, அதனினும் அதிகமான பிறநாட்டு 'யோசனை' அளவால் கணக்கிட்டு, மேலும் இடத்தினைப் பெறுக்கிக் கொள்ளுவதற்காகச் **செல்லும் செயல்கள்,** குறிப்பிட்ட எல்லையைக் கடவேனென்று கூறி விரதம் மேற்கொண்ட **எல்லையை மறத்தல்,** செல்லேன் என்று விரதம் மேற்கொண்டனவாகிய கிணறு, ஏரி போன்றனவற்றில் **இறங்குதல்,** மலை முதலானவற்றில் **ஏறுதல்,** திசைநோக்கி **மீறிச்செல்லுதல்** ஆகிய ஐந்து செயல்களும் திக்குவிரதத்தை மீறிச் செய்யப் பெறுகின்ற செயல்களாம்.)

(அனர்த்ததண்ட விரதம்)

89. எல்லை யகத்தும் பயமில மீண்டொழுகல்
நல்லனத்த தண்ட வதம்.

எல்லையகத்தும் பயமில மீண்டொழுகல்—தான் வரைவு பண்ணின எல்லைக்குள்ளேயும் प्रयोजन மில்லாமல் सञ्चरि க்கிறதை வரைவு பண்ணி நடக்கிறது

நல்லனத்ததண்டவதம்—நல்ல अनर्थदण्डव्रत மென்பதாம்.

(அகூ)

(திக்கு விரதம் மேற்கொண்டு, வாழ்நாள் முழுமையும் இவற்றைக் கடந்து செல்லேனென்று குறிப்பிட்ட எல்லை களுக்கிடையே செல்லுங் காலையும் எவ்வித பயனுமில்லாமல் வீணே சென்று வருவதையும் நிறுத்தி பயனுள்ள செயல் களுக்காக மட்டுமே செல்லுவது என்ற வரையறையோடு நடந்து கொள்ளுவது சிறந்த 'அனர்த்ததண்டவிரதம்' எனப்பெறும்.)

(விரதம் மேற்கொள்ளும் முறை)

90. ஐந்தனத்த தண்ட விரத முறையுள்ளிச்
சிந்திக்கச் செய்வன் றெரிந்து.

ஐந்தனத்த தண்டவிரத முறையுள்ளி—ஐந்து प्रकार மான अनर्थदण्डव्रत த்தை क्रम த்திலுலே चिन्ति ச்சு

சிந்திக்கச்செய்வன்றெரிந்து — मनसि லே चिन्ति ச்சுத் தெரிந்து व्रत த்தைப் பண்ணி நடப்பனென்பதாம்.

(கூ0)

(தீச்சிந்தை, தீச்சொல், பயனில் செயல், கொலை கொடுத்தல், தீயன கேட்டல், (பொய் நூல் பயிலல்) ஆகிய ஐந்து வகையான அனர்த்ததண்டவிரதத்தை நூல்களில் கூறிய முறைப்படி கற்றறிந்து, உள்ளத்தால் ஊன்றிச் சிந்தித்துத் தெளிவு பெற்று, அவை தம்மையணுகாதவாறு விரதம் மேற்கொண்டு நடத்தல் வேண்டும் என்பர்.)

3

(தீச்சிந்தை)

91. ஆர்வோடு செற்றத்தை யாற்கும் நினைப்புக
டவுறு தீச்சிந்தை யாம்.

ஆர்வோடு செற்றத்தை—रागद्वेष த்துக்குக் காரணமான
वचन த்தை

யாற்கும் நினைப்புகடவுறுதீச்சிந்தையாம்—சகலருக்கும்
நினைச்சுண்டாகிறது पाप த்துக்குக்
காரணமானச் சிந்தையாம்.

(கூக)

(நட்பையும் பகையையும் விளைவிக்கின்ற விருப்பு, வெறுப்புகளுக்குக் காரணமான சொற்களை உள்ளத்தால் யார் நினைத்தாலும் எவர் மீது நினைத்தாலும் அங்ஙினவே அனர்த்ததண்ட விரதங்களுள் ஒன்ருகியதும் பாவத்துக்குக் காரணமானதுமான 'தீச்சிந்தை' என்று கூறுவர்.)

(தீச்சொல்)

92. சேவாள் விலைகொளல் கூறுதல் கூட்டுதல்
பாபோப தேச மெனல்.

சேவாள் விலை கொளல் கூறுதல் கூட்டுதல்—செங்
கண்ணு முதலானது விலை குடுத்து கொள்ளு
குறத்துக்குத் தன் காரிய மாத்திரம் பார்த்துக்
கொண்டிராமல் பரருக்குச் சொல்லிக் கூட்டி
விக்குறது

பாபோபதேசமெனல்—पापोपदेश மென்பதாம்.

(கூஉ)

பாபோபதேசம்.

(சேங்கன்று முதலியவற்றை விலை கொடுத்து வாங்குவதற்குரிய செயல்களில் தன் செயலை மட்டும் மேற்கொள்ளாமல் அன்னியரிடத்து அதுபற்றி எடுத்துச் சொல்லுவதும் விலை முதலானவற்றைக் கூடுதலாக்கிக் கூறுவதும் ஆகிய சொற்கள் அனர்த்ததண்டவிரதங்களுள் ஒன்ருகிய 'தீச்சொல்' (பாபோபதேசம்) என்று கூறுவர்.)

(பயனில் செயல்)

93. பயமின் மரங்குறைத்த லோடகழ்த லென்ப
பயமில் பமாத மெனல்.

பயமின் மரங்குறைத்த லோடகழ்தல்—प्रयोजन மில்லாமல் மரத்தைக் குறைக்கிறதும் துரும்பு யிலைகளைக் கிள்ளு கிறதும் பூமியைக் கெல்லு கிறதும் கையினுலே கிறுக் குறது முதலானது

பயமில்பமாதமெனல்—प्रयोजन மில்லாமல் பண்ணுகிற प्रमादचरित மென்பதாம்.

(கூங)

(மரத்தின் கிளைபோல்வனவற்றை வெட்டிக் குறைக் கின்றபோது வெட்டுகின்ற தனக்கோ பிறருக்கோ, வெட்டப் பெறுகின்ற மரத்திற்கோ எவ்வித பயனும் இல்லாமல் வெட் டிக் குறைப்பது, துரும்பு, இலை போல்வனவற்றைக் கிள்ளி எறிவது, பூமியை வீணே தோண்டுவது, தரை, சுவர்போன் றனவற்றில் கையினுல் கிறுக்குவது போன்ற அறிவழிந்த தன்மையில் செய்யப் பெறுகின்ற செயல்கள் அனத்த தண்ட விரதங்களுள் ஒன்ருகிய **'பயனில் செயல்'** என்று கூறப்பெறும்.)

(கொலை கொடுத்தல்)

94. தீக்கருவி நஞ்சு கயறு தடிஞர்க
ளீத்தல் கொலைகொடுத்த லாம்.

தீக்கருவி—நெருப்பு, மண்வெட்டி, கொடுவாள், கோடாலி முதலான ஆயுதம்

நஞ்சு—விழம்

கயறு—பிணைக்கயறு, பூட்டாங்கயறு முதலான கயறும்

தடி—தடியும்

ஞர்களீத்தல் கொலைகொடுத்தலாம்—நார்கள் முதலான தும் தன்காரியம் பார்த்துக் கொண் டிராமல் பரருக்கு உபகாரமாகக் கொடுக்கிறது கொலையைக் கொடுத் ததென்கிற हिंसादान மாம். (கூச)

(தீச் செயல்களுக்குத் துணைபுரிவனவாகிய நெருப்பு, மண் வெட்டி, கோடரி போன்ற பொருள்களையும் கொலை முதலான செயல்களுக்குத் துணைபுரிவனவாகிய நஞ்சு, பிணிக்கயிறு, பூட்டாங்கயிறு, தடி, நார் முதலிய பொருள்களையும் கொண்டு தனக்குரிய செயல்களை மட்டும் செய்து கொள்ளாமல், பிறருக்கு உதவி செய்கின்ற முறையில் அப்பொருள்களைக் கொடுப்பதானது அனர்த்ததண்ட விரதங்களுள் ஒன்றாகிய 'கொலை கொடுத்தல்' (இம்சாதானம்) என்று கூறுவர்.)

(தீயன கேட்டல்)

95. மோகத்தை யீன்று தவமழிக்குஞ் சொற்கேட்டல்
பாவச் சுருதி யெனல்.

மோகத்தை யீன்று தவமழிக்குஞ் சொற்கேட்டல்—अज्ञानத்தை யுண்டாக்கி तपसैக் கெடுக்கிறதுக்குக் காரணமான ராமாயணம், பாரதமான பொய் நூலான परशास्त्रங்களை விநோதமாகக் கேட்கிறது
பாவச்சுருதியெனல்—பாவச் சுருதி யென்பதாம்.
(௯௫)

(உள்ளத்தே ஆசையைத் தோற்றுவித்து, அறிவை மயக்கி, அறியாமையை வளர்த்து, நல்விரதத்தைக் கெடுப்பதற்குக் காரணமாக இருக்கின்ற பொய்நூல்களான பிற நூல்களை மிகவும் ஆர்வத்தோடு கேட்டறிவதானது அனர்த்த தண்ட விரதங்களுள் ஒன்றாகிய 'தீயன கேட்டல்' (பாவச் சுருதி) என்று கூறப்பெறும்.)

(அனர்த்ததண்ட விரதத்தை மீறிய செயல்கள்)

96. நகையே நினைப்பு மொழியின்மை கூறன்
மிகைநினைவு நோக்கார் செயல்.

நகையே—सभायोग्य மல்லாத वचनங்களையும் परिहासवचनங்களையுமிஞ்சொல்லுங்கந்தர்ப்பமும்
நினைப்பு—करचरण புருவநயன नासिका கோடிகளின் விகாரத்தினுற் சொல்லும் நினைவாகிக் கொள்ளும் குச்சியமும்

மொழியின்மை கூறன்—दृष्टान्त ங்களினால் நிர்பந்தக वचन ங்களைச் சொல்லுமெனக் காரியமும்
மிகை நினைவு—தன்னை எல்லாக் காலமுமலங்கரித்திருக்க வேணுமென்று மிகுதியான நினைவான अतिप्रसाद மும்
நோக்கார் செயல்—मनवचनकाय த்தினாலேயுமாகாத காரி யங்களைச் செய்கிறதுமான असमीक्ष्याधिकरण மென்று अनर्थदण्डव्रत த்துக்கைந்த तीचार மாகும்.

(கூசு)

(சான்றோரவையில் கூறத்தகாத சொற்கள், ஏளனமாகப் பேசுகின்ற சொற்கள் ஆகியவற்றைக் கூறுகின்ற அடக்க மின்மையோடு கூடிய **இறுமாப்பும்** தம் கருத்தைச் சொல்லு வதாகக் கருதி கை, கால், கண், புருவம் ஆகிய உறுப்புக் களினால் குறும்புத்தனமாக இகழ்ச்சிபடச் செய்கின்ற **விகாரக்** குறிப்புகளாம் தாழ்ந்த செயல்களும் உவமைகளாம் சான்றுகளினாலே **'இது இத்தன்மைத்தே'** என்று உறுதிப் படுத்திக் கூறுகின்ற தகுதியற்ற சொற்களும் எக்காலமும் செயற்கை முறையில் தன்னை அழகுபடுத்திக் கொள்ள வேண்டுமென எண்ணுகின்ற மிகுதியான **அலங்காரமும்** மனம், மொழி, மெய்களினாலே செய்ய **இயலாத** செயல்களைச் செய்யத் தொடங்குவதும் ஆகிய ஐந்து செயல்களும் ஆரா யாது, முறைதவறி செய்யப்பெறுகின்ற செயல்களாகவும் அனர்த்ததண்ட விரதத்தை மீறி செய்யப்பெறுகின்ற செயல் களாகவும் கருதப்பெறும்.)

(அனர்த்த தண்டவிரதம் இறவாது காத்தல்)

97. ஐந்தனத்த தண்ட விரதக் கிறப்பிவை
முந்துணர்ந்து கார்க்க முறை.

ஐந்தனத்ததண்டவிரதக்கிறப்பிவை—ஐந்து प्रकार மான अनर्थदण्डव्रत த்துக்க तीचार மான இவை எல்லாம்
முந்துணர்ந்து கார்க்க முறை—முன் வருகிற பவத்தை யறிந்து रक्षि க்கிறது முறமையென்பதாம்.

(கஎ)

(வரவிருக்கின்ற பிறப்பு அறிந்து, அப்பிறவித் துன்பம் நம்மையடையாதிருக்க அனர்த்ததண்ட விரதத்தை மீறிய செயல்களாகிய, மேலே கூறிய ஐந்து தன்மைகளும் நம்மை யணுகாதவாறு காத்து ஒழுகுவதே சிறப்புடைய செயலாகும்.)

(போக-உபபோக பரிமாண விரதம்)

98. போகோப போக பரிமாண மென்றுரைப்பர்
வாயிற் புலன்கள் வரைந்து.

போகோபபோக பரிமாணமென்றுரைப்பர்—भोगवस्तु வையும் उपभोगवस्तु வையும் प्रमाणमान மட்டுப் பண்ணி நடக்கிறது भोगोपभोग परिमाणव्रत மென்று சொல்லுவர்

வாயிற்புலன்கள் வரைந்து—पञ्चेन्द्रिय வழியிலுலே வரப் பட்ட ஆசையை மட்டுப் பண்ணுகிறதாம்.

(கூஅ)

(மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் வழி துய்க்க விரும்பும் அவாவினைக் குறைத்து, உணவு, வெற்றிலைப்பாக்கு, மலர், சந்தனம் முதலிய போகப் பொருள்கள், கட்டில், மெத்தை, தண்டிகை, பல்லக்கு, பெண்டிர் போன்ற உபபோகப் பொருள்கள் ஆகியவற்றை மிகவும் குறைத்துக்கொண்டு ஒழுகுவது ‘போகோபபோக பரிமாண விரதம்’ என்று கூறுவர்.)

(போகப்பொருள், உபபோகப் பொருள்கள்)

99. துய்த்துக் கழிப்பன போக முபபோகந்
துய்ப்பாம் பெயர்த்து மெனல்

துய்த்துக் கழிப்பன போகம்—अशनं ताबूलं पुष्प மாலை चन्दन முதலானது ஒருதரம் अनुभवि த்துக் கழிப்பது भोग மென்றும் பேராகும்.

உபபோகம்—கச்சிற் கட்டில், மெத்தை, தண்டிகை, பல்லக்கு யர் முதலானது उपभोग மென்னும் பேரை உடைத்தாய்

துய்ப்பாம் பெயர்த்து மெனல்—திரும்பத் திரும்ப அநுப
விக்கிறதாம்.

(கூகூ)

(ஒருமுறை அனுபவத்துக் கழிக்கப்பெறும் பொருள்களா கிய உணவு, தாம்பூலம், மலர், மாலை, சந்தனம் போல்வன போகப்பொருள்கள் என்று பெயர் பெறும். மீண்டும் மீண்டும் அனுபவிக்கப் பயன்பெறுவனவாகிய கட்டில், மெத்தை, தண்டிகை, பல்லக்கு, பெண்டிர் முதலிய பொருள் கள் உபபோகப் பொருள்கள் என்று கூறப்பெறும்.)

(சாமாயிக விரதம்)

**100. கட்டுவிடு காறு மெஞ்சாமை யைம்பாவம்
விட்டொழுகல் சாமா யிகம்.**

கட்டுவிடுகாறும்—கூறை, மயிர், முடி, முட்டி, நிலை,
யிருக்கை என்கிற நேமமானகட்டு விடுகிற
பர்யந்தம்

எஞ்சாமை—குறைவில்லாமல்

ஐம்பாவம் விட்டொழுகல் சாமாயிகம்—கொலை முதலான
ஐந்து ப்ரகாரமான பாபத்தை விட்டு
நடந்து கொள்ளுகிறது ஸாமாயிக
மென்பதாம்.

(ள)

(கூறை கட்டுதல், மயிர் முடித்தல், முட்டி, நிலை, இருக்கை ஆகிய பற்றுகளை விட்டு நீங்கி முடிவுபெறும்வரை சிறிதும் குறைவில்லாது கொலை, பொய், களவு, காமம், பொருள் வரைதல் ஆகிய ஐவகையான பாவச் செயல்களை யொழித்து ஒழுகுகின்ற ஒழுக்கமே "**சாமாயிக விரதம்**" என்பதாகும்.)

(கட்டு)

**101. கூறை மயிர்முடி முட்டி ருக்கை
கூறிய கட்டென் றுணர்.**

கூறைமயிர்முடி — பிடவையாலும் மயிரையாலும்
நியமித்துமுடியிறது.

முட்டி—இடது கை பெருவிரலும் பெருவிரலண்டையிலே யிருக்கிற तर्जनि விரலும் கூட்டி முட்டியா கப் புடிக்கிறதும்

நிலே—कायोत्सर्ग மாக நிற்கிறதும்

யிருக்கை— पर्यङ्कासन மாக யிருக்கிறதும்

கூறிய கட்டென்றுணர்—முன்னே சொன்ன குறளிலே குறித்துச் சொல்லப்பட்ட கட்டென்றறி குவது.

(௱க)

(புதிய புடவையையும் தலைமயிரையும் இவ்வாறுதான் முடிதல்வேண்டுமென நியமித்தவாறு கட்டுவது; இடதுக் கைப் பெருவிரலும் அதனையடுத்த சுட்டுவிரலும் வளைந்து பொருந்தக் கூட்டி முட்டியாகப் பிடிப்பது; யாக்கையிற் பற்றறுத்துத் துன்பங்களுக்கு அஞ்சாது நிற்பது; மல்லார்ந்த நிலையில் படுத்து இருப்பது ஆகிய செயல்களே மேல் குறட் பாவில் கூறப்பெற்ற 'கட்டு' என்பதாகும்.)

(சாமாயிகத்திற்காமிடம்)

102. ஒருசிறை யில்லம் பிறவழி யானும்
மருவுக சாமா யிகம்.

ஒருசிறையில்லம்—ஒரு பிரகாரம் மனையிலேயானாலும்

பிறவழியானும்—चैत्यालय ம்-மலே नदि குளக்கரை காட்டிலே யானாலும்

மருவுக சாமாயிகம்— जलस्तोत्र மான, सामायि கத்தை नियमि த் துக்கொள்வது.

(௱உ)

(பிறர் அறியாது மனத்திற்குள்ளே சொல்லி வணங்கு வதும் வெளிப்படையாகக் கூறிவணங்குவதுமான சாமாயிக விரதத்தினை இல்லத்தில் இருந்தோ இறையாலயம், மலை, நதி, குளக்கரை, காடு போன்ற பிறவிடங்களிலிருந்தோ மேற் கொள்ளலாம் என்பதுணர்ந்து அவ்விரதத்தினை மேற் கொள்ள உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.)

(சாமாயிகத்திற்காங்காலம்)

**103. சேதியம் வந்தனை பட்டினி யாதியா
யோதிய கால மதற்கு.**

சேதியம் வந்தனை—त्रिसन्ध्या காலங்களிலேயும் जिनप्रतिम யை वन्दनैப்பண்ணுகிற விடத்திலே யும் अपूर्वचैत्यालयवन्दनै யிலேயும்
பட்டினியாதியாய்—उपवास முதலானது பண்ணுகிற விடத்திலேயும்
ஓதியகாலமதற்கு—सामायि கத்துக்குக் கால नियम ஞ் சொல்லப்பட்ட தென்றறிவது. (௱௩)

(காலை, மாலை, நண்பகலாகிய மூன்று காலங்களிலும் சமணமத இறையுருவங்களை வணங்கி நிற்கின்ற விடங்களிலும் புதிதாகச் செல்லுமிடங்களில் செய்கின்ற ஆலய வழிபாடுகளிலும் உண்ணு நோன்பினை மேற்கொள்ளுங் காலங்களிலும் சாமாயிகத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதே சாமாயிகத்தின் காலவரையறை என்று கூறுவர்.)

(விரதம் முற்றுதற்காம் வழிகள்)

**104. பெற்ற வகையினுற் சாமாயிக மூய்ப்பின்
முற்ற நிறையும் வதம்.**

பெற்றவகையினுற் சாமாயிக மூய்ப்பின்—தன் சக்திக்குத் தக்க மாத்திரம் இப்போசொன்ன பிரகாரம் நடந்து முடிச்சால்
முற்றநிறையும்வதம்—கைக்கொண்ட व्रत ம் सम्पूर्ण மாக முடியு மென்பதாம். (௱௪)

(மேலே கூறப்பெற்ற இடம், காலம் முதலிய முறைகளை யறிந்து, தன் சக்திக்கு ஏற்றவாறு சாமாயிக விரதத்தினை மேற்கொண்டொழுகி முடித்தால், எடுத்துக்கொண்ட விரதம் முழுமையாக நிறைவேறும் என்று கூறுவர்)

**105. தனிய னுடம்பிது வேற்றுமை சுற்ற
மினைய நினைக்கப் படும்.**

தனியனுடம்பிது—सामायिक ம் பண்ணிக் கொள்ளுகிற வேளையிலே शरीरं வேறு जीव ன் வேறு

வேற்றுமை சுற்றம்—சுற்ற முதலானதும் வேறு
இனைய நினைக்கப்படும்—இதுமுதலானதும் நினைக்கப்படு மென்பதாம். (௱௫)

(சாமாயிகம் மேற்கொள்ளுங்கால் தன் உடலும் உடலொடுகூடிய உயிரும் வெவ்வாருனவை என்பதும் தன்னைச் சார்ந்து விளங்கும் சுற்றமும் தன்னின் வேருனது என்பதும் நன்கு சிந்தித்து உணரப்பெறுதல் வேண்டும்.)

**106. இறந்ததன் றீமைக் கிழித்து பழித்தும்
மறந்தொழியா மீட்ட றலே.**

இறந்ததன்றீமைக் கிழித்தும் பழித்தும்—போன भव ங்களிலே தான் பண்ணிக்கொண்ட पाप த்துக்குத் தன்னுல் தன்னை निन्द த்தும் பழித்தும்
மறந்தொழியா மீட்டறலே—மறந்து விடாமல் पाप த்தை परिहरि த்து நடக்கிறது श्रेष्ठ மென்பதாம். (௱௬)

(கழிந்த பிறவிகளில், தனக்குத் தானே செய்துகொண்ட பாவச்செயல்களுக்கேற்பத் தன்னைத்தானே இழித்தும் பழித்தும் நொந்துகொள்வதோடன்றி, அவை பாவச்செயல்களாம் என்பதனைச சிறிதும் மறவாது அச்செயல்களை விலக்கி ஒழுகுவதே விரதத்திற்காம் உயர்ந்த தன்மையாகும்.)

**107. தீயவையெல்லா மினிச்செய்யே னென்றடக்கி
தூயவகை யினிற்றலு மற்று.**

தீயவையெல்லாம்—पापकार्य மெல்லாம்
இனிச்செய்யேனென்றடக்கி—सामायिकம் பண்ணிக்கொள்ளுகிற கால पर्यन्तं செய்யேனென்றடக்கி
தூயவகையினிற்றலு மற்று—शुद्ध மாக நடக்கவேணு மென்பதாம். (௱௭)

(பாவத்திற்குக் காரணமான தீயசெயல்கள் எவற்றையும் சாமாயிக விரதம் மேற்கொண்டொழுகும் காலம் முழுமையும் செய்யேனென்று உறுதிபூண்டு அதன்படி மனம்,

மொழி, மெய்களால் தூய்மையாக நடந்து கொள்ளுவதே உயர்ந்த விரதமாகும்.)

108. ஒன்றியு மொன்றுதுந் தான்செய்த தீவினையை
நின்று நினைந்திரங்கற் பாற்று.

ஒன்றியும்—அறிந்தும்
ஒன்றுதும்—அறியாமையும்
தான் செய்த தீவினையை—தான் பண்ணின பாப வினையை
நின்று நினைந்திரங்கற்பாற்று—ஸாமாயிக வேளையிலே மனஸிலே சிந்தித்து நின்றிரங்கப்படு மென்பதாம். (ாஅ)

(தான் செய்கின்ற செயல்கள் சான்றோர் வகுத்த நன்னெறியினின்றும் மீறி செய்யப் பெறுகின்றதும் தனக்கும் பிறருக்குந் துன்பத்தைத் தருவதுமாகிய பாவச்செயல்களே என்பதை ஆய்ந்து அறிந்தோ அறியாமலோ செய்யப்பெற்ற பாவச்செயல்களைச் சாமாயிக விரதம் மேற்கொள்ளுங் காலத்து நன்கு சிந்தித்து, அப்பாவச் செயல்களுக்காக இரங்கி நிற்பதே, அப்பாவச் செயல்கள் மேலும் நடவாதவாறு பாதுகாத்தற்கேதுவாகும்.)

109. தனக்கும் பிறர்க்கு முறுதிச்சொற் செய்கை
மனத்தினிற் சிந்திக்கற் பாற்று.

தனக்கும் பிறர்க்கு முறுதிச்சொற் செய்கை—தனக்கும் பிறர்க்கும் உறுதியான தர்ம மாகிற சொல்லைக் கொண்டிருக்க வேணுமென்கிற சிந்தையானது
மனத்தினிற் சிந்திக்கப்பாற்று—எந்நேரம் மனதிலே சிந்தித்திருக்க வேணுமென்பதாம். (ாகூ)

(தனக்கும் பிறருக்கும் உறுதி பயப்பதாகிய அறச் செயல்களையே என்றும் கூறுதல் வேண்டுமென்ற கருத்து உள்ளத்தை விட்டு எக்காலத்தும் நீங்காதவாறு காத்து ஒழுகுவதே சாமாயிக விரதத்தின் சிறந்த தன்மையாகும்.)

110. பிறர்கண் வருத்தமுஞ் சாக்காடுங் கேடு
மறந்தும் நினையாமை நன்று.

பிறர்கண்—பிறரிடத்திலே
வருத்தமும்—வருத்தப்படுகிறதும்
சாக்காடும்—சாகவேணுமென்கிறதும்
கேடு—கெடவேணுமென்கிறதும்
மறந்து நினையாமை நன்று—மனதிலே மறந்தானாலும் இந்தப்பிரகாரம் நினையாமலிருக்கிறது நல்லதென்பதாம். (௱௰)

(எந்த வகையான சூழ்நிலைகள் தனக்கு ஏற்படுமாயினும் பிறர் கூறும் சொற்கள், அவர்கள் செய்யும் செயல்கள் ஆகியவற்றைக்கொண்டு அவர்கள்மாட்டு வருத்த மடைவது, பற்பல காரணங்களால் அவர்கள் இறக்கவேண்டு மென்று கருதுவது, அவர்கள் சீர்கெட்டழிய வேண்டுமென்று எண்ணுவது ஆகியவற்றைத் தன்னை மறந்தும் உள்ளத்தில் நினையாமலிருப்பதே மிக உயர்ந்ததும் நன்மை பயப்பதுமாகிய விரதமாகும்,)

111. திருந்தார் பொருள் வரைவுந் தீயார் தொடர்பும்
பொருந்தாமை சிந்திக்கப் பாற்று.

திருந்தார்பொருள்வரைவும்—त्रिकरणशुद्धि யான परिणाम த்துக் குக் காரணமாகாத பொருள் வரைவையும்
தீயார் தொடர்பும்—दुर्मार्गरुடைய சாவகாசத்தையும்
பொருந்தாமை சிந்திக்கப் பாற்று—பொருந்தாமையை मनसि லே सावधान மாகப் பாத்து சிந்தித்துக்கொண்டிருப்பதாம். (௱௰௧)

மனம், மொழி, மெய்களின் தூய்மையான மாற்றம் பெறுவதற்குச் சிறிதும் தகுதி பெருதவர்கள் பொருள் ஈட்டுதலும் நற்குண நற்செயல்கள் சிறிதுமில்லாத தீயவர்களிடத்தில் கொள்ளும் தொடர்பும் என்றும் பொருத்தமுடையதாகாது என்பதை உள்ளத்தால் நன்கு ஆழ்ந்து சிந்தித்து ஒழுகுதல் வேண்டும்.)

112. கூடியவை யெல்லாம் பிரியவுங் கூடின்மை
கேடின்மை சிந்திக்கப் பாற்று.

கூடியவை எல்லாம் பிரியவும்—जीव னுக்கு कर्मवश த்தினலே संयोगமாக யிடையிலே வந்து கூட்டின

புத்ரர் மித்ரர்கள் कलत्रம் முதலான चेतनपरिग्रह மும் धनधान्य மான अचेतनप-रिग्रह மும் இடையிலே பிரிவானத்தையும்

கூடின்மைகேடின்மை சிந்திக்கப்பாற்று — கூட்டரவில்லாத ஒருக்காலும் கெடாத जीवस्वरूप த்தை मनसि லே பாற்று चिन्तित्तु க் கொண்டிருப்பது (௱௰௨)

(ஒருவனுடைய முன்வினைப் பயனால் அவன் வாழ்க்கையின் இடையிலே வந்து சேர்ந்து பிரியக்கூடிய மனைவி, மக்கள். நண்பர் போன்ற உயிருள்ள பொருள்கள், வீடு, நிலம், பணம், தானியங்கள் போன்ற உயிரற்ற பொருள்கள் ஆகியவற்றை அனுபவித்து மகிழ்ந்திருந்து, பின்பு அவை யாவும் தன்னை விட்டுப் பிரியுந் தன்மையினையும் தான் என்றும் கூடி மகிழ்ந்தறியாததும் என்றும் அழிதலில்லாததுமான உயர்ந்த "உயிர் நிலை" யின் தன்மையையும் உள்ளத்தாலறிந்து நன்கு சிந்தித்துத் தெளிதல் வேண்டும்.)

(சாமாயிக விரதத்தை மீறிய செயல்கள்)

113. உள்ள மொழிசெய்கை தள்ளல் விருப்பின்மை
யுள்ளார் மறுத்த லிறப்பு.

உள்ள மொழி செய்கை தள்ளல்—मन சுலே வேறேயொன்றை நினைக்கிறதும் वचन த்திலே மற்றொன்றை சொல்லுகிறதும் காயத்திலே நடந்தொரு காரியத்தை பண்ணுகிறதுமான मनवचनका-यवक्र மும்

விருப்பின்மை— सामायिक த்திலே விருப்பின்மை

உள்ளார் மறுத்த லிறப்பு—காலத்திலே பண்ணுகிற क्रम த்தை மறைக்கிறதும் இறப்புச் சாமாயிகத்துக் கைந்ததீசாரமாகும். (௱௰௩)

(உள்ளத்தால் ஒன்றினை நினைப்பது, மொழியால் வேறொன்றினைக் கூறுவது, மெய்வழிச் செயலால் பிறிதொன்றினைச் செய்வது ஆகிய மன, மொழி, மெய்களினாலாகும்

மூவகை மாறுபாடுகளும் சாமாயிக விரதத்தில் விருப்பில் லாமையும் உரிய காலத்துச் செய்கின்ற முறையான சாமாயிகத்தை மறைப்பதும் ஆகிய ஐவகைச் செயல்களும் சாமாயிக விரதத்தை மீறி செய்யப்பெறுகின்ற செயல்களாம்.)

(சாமாயிகத்தோர் செயல்)

114. நல்லறச் சார்வும் நவையற நீக்கலும்
பல்வகையாற் பார்க்கப் படும்.

நல்லறச் சார்வும்—நல்ல धर्म த்தைச் சார்கிறதும்
நவையற நீக்கலும்—दुःख கெடத்தக்கதாக पापकार्य த்தை நீக்குறதும்
பல்வகையாற் பார்க்கப்படும்—பலவகையினுலே நாள் தோறும் शास्त्र த்தைப பார்க்கப்படு மென்பதாம். (௱௰௪)

(சாமாயிக விரதத்தைப் போற்றும் ஒவ்வொருவரும் சிறந்த அறநெறியில் தவருத ஒழுக்கத்தினை நாள்தோறும் கடைப்பிடித்தொழுகுவதும் தமக்கும் பிறருக்கும் ஏற்பட விருக்கும் துன்பமானது அழியத்தக்க முறையில் தீச்செயல் களை நீக்கி ஒழுகுவதும் ஆகிய பலவகைகளில் அறநெறி கூறும் சிறந்த மறைநூல்களை நாள்தோறுமாய்ந்து மனத்துட் கொள்ளுதல் வேண்டும்.)

(போசத விரதம்)

115. உவாவட்ட மியின்கண் ணல்வகை யூணு
மவாவறுத்தல் போசத மென்.

உவாவட்டமியின்கண்—पर्व अष्टमि யிலே
நால்வகையூணுமவாவறுத்தல் — உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன, என்னும் நால் வகையான अन्न த்திலும் ஆசையை விட்டு उपवास த்தைப் பண்ணுகிறது
போசதமென்—प्रोषधोपवास மெனபதாம். (௱௰௫)

(வளர்பிறை, தேய்பிறைப் பருவங்களாகிய இருவகைப் பருவங்களில் ஆகும் அட்டமி நாட்களில் ஓரிரவும் பகலு மாகிய ஒருநாள் முழுமையும் உண்பன, தின்பன, நக்குவன,

குடிப்பனவாகிய நால்வகை உணவுப் பொருள்களிலும் உண்டாகின்ற அவாவினை விட்டு ஒழுகுதலாகிய விரதத்தினை மேற்கொள்ளுதல் போசதவிரதம் (புரோஷதோபவாசம்) என்று கூறப்பெறும்.)

(போசத விரத கால ஒழுக்கம்)

116. ஐம்பாவ மாரம்பம் நீராட்டுப் பூச்சாந்து
நம்பற்கப் பட்டினியிஞ் ஞான்று.

ஐம்பாவம்—கொலை முதலான ஐம்பாவமும்
ஆரம்பம்—कृष्यादि आरम्भ மும்
நீராட்டு—स्नान ம் பண்ணுகிறதும்
பூச்சாந்து—पुष्प மாலை முடிக்கிறதும் चन्दन ம் பூசுகிறதும்
நம்பற்கப்பட்டினியிஞ்ஞான்று — उपवास த்திலே விட்டு நடப்பது. (௱௰௬)

(போசத விரத காலத்து, கொலை, களவு, பொய், காமம், அவா ஆகிய ஐவகைப் பாவச் செயல்களிலீடுபடுதல், உழுதல், விதைத்தல் போன்ற தொழில்களைத் தொடங்குதல், நீராடுதல், மலர் மாலை போல்வன சூடுதல், சந்தனம் போன்ற மணப்பொருள்களைப் பூசுதல் ஆகியவற்றை அறவே விட்டொழுகுதல் வேண்டும்.

117. அறவுரை கேட்டல் நினைத்த லுரைத்தல்
திறவதிற் செய்யப் படும்.

அறவுரை கேட்டல்—धर्म வரையை கேட்கிறதும்
நினைத்தல்—मनसि லே நினைக்கிறதும்
உரைத்தல்—अन्य ருக்குச் சொல்லுகிறதும்
திறவதிற்செய்யப்படும்—उपवासदिवस த்திலே सामर्थ्य த்தினாலே செய்யப்படுமென்பதாம். (௱௰௭)

(விரதம் மேற்கொள்ளுங் காலத்து இடையிலேற்படும் இடையூறுகள் எவையாயினும் அவற்றைத் தவிர்த்து, சான்றோரால் கூறப்பெறும் சிறந்த அறவுரைகளைக் கேட்டல், அவற்றை மீண்டும் மீண்டும் எண்ணி நினைவிற் கொள்ளுதல், தாம் அறிந்தவற்றை உரிய முறையில் பிறருக்கு எடுத்துக் கூறுதல் ஆகிய நற்செயல்களைத் திறம்பட மேற்கொள்ளுதல் வேண்டும்.)

(உண்ணுமை—உயர்வு, தாழ்வு)

118. உண்டி மறுத்த லுபவாதம் போசதமெண்
ணுண்ட லொருபோதி னில்.

உண்டி மறுத்தல்—अन्न த்தை விடுகிறது
உபவாதம்—उपवा ச மென்பதாம்
போசதமெண்ணு உண்டலொருபோதினில்—போது மறுத்து ஒருபொழுதுண்பது जघन्य उपवास மாம்,
(௱௰அ)

(உணவினை அறவே விடுத்து ஒழுகுதல் உண்ணுவிரதம் (உபவாசம்) என்று கூறப்பெறும். அவ்வாறன்றி ஒருவேளை உணவினை உட்கொள்ளுதல் தாழ்ந்த உண்ணுவிரதம் (ஜெகன்ய உபவாசம்) என்று கூறப்பெறும்.)

119. போச துபவாச மென்றுரைப்பர் பட்டினிவிட்
டாரம்பஞ் செய்யா னெனில்.

போசதுபவாசமென்றுரைப்பர் — प्रोषधोपवास மென்று சொல்லப்படும்
பட்டிணிவிட்டாரம் பஞ்செய்யா னெனில்—उपवास த்தைப் பண்ணி आरम्भஞ் செய்யாதிருந்தால்
(௱௰௯)

(வாழ்க்கையில் போசதவிரதம் என்னும் விரதத்தினை மேற்கொண்டொழுகுதல் வேண்டும் என்னும் உறுதி பூண்டு அதன்படி நாள்முழுவதும் உண்ணுமை போன்ற முறைப்படி விரதம் மேற்கொண்டு இடையிலே அவ்விரதத்தைக் கைவிட்டு, மீண்டும் தொடங்குதல் என்ற முறையை மேற் கொள்ளாதிருப்பதே போசதவிரதம் என்றுசொல்லப்பெறும்.)

(போசத விரதத்தை மீறிய செயல்கள்)

120. நோக்கித் துடையாது கோடன் மலந்துறத்தற்
சேக்கைப் படுத லிறப்பு.

நோக்கித் துடையாது கோடன்—பாத்து प्रक्षाளியாமல் மனைமுதலான वस्तु வை கைக்கொள்ளு கிறதும்
மலந்துறத்தல்—பாத்து प्रक्षाளி யாமல் जीवजन्तुக்கள் மேலே मल मूत्रத்தை விடுகிறதும்

சேக்கைப்படுதலிறப்பு—பாத்து प्रक्षालि யாமல் शयनस्थलத்தி
லே படுத்துக் கொள்ளுகிறதும் अतीचार
மாம். (௱உ0)

(இல்லறத்திற்குரிய மனைமுதலான பொருள்களை நன்கு தூய்மை செய்யாமல் பயன் படுத்துதல், மல, மூத்திரங் கழிக்குமிடத்தைத் தூய்மை செய்யாமல் அங்குள்ள புழு பூச்சிபோன்ற உயிர்களின்மீது மல, மூத்திரங்கழித்தல், படுக்குமிடத்தைத் தூய்மை செய்யாமல் படுத்துக் கொள்ளுதல் ஆகிய மூன்றும் போசதவிரதத்தை மீறி செய்யப் பெறுகின்ற செயல்களாம்.)

121. கிரிசை விருப்புக் கடிப்பிடி யின்மை
யுரிதி னிறப்பிவை யைந்து

கிரிசை விருப்பு—जपस्तोत्रமான க்ரியையிலே விருப்பமில்
லாததும்
கடிப்பிடியின்மை— धर्मचिन्ते யான நினைவிலாததும்
யுரிதினிறப்பிவையைந்து—उपवासदिवस த்திலே யுரித்தான
வைந்ததீசாரமாம். (௱உக)

(மேலே கூறிய மூன்று செயல்களோடு மந்திரத்தின் மூலம் உள்ளத்தால் வணங்குவதும் பிறவாகிய பாக்களினுலே வாயார வாழ்த்தி வணங்குவதுமாகிய செயலில் விருப்பமில்லாதிருத்தல், அறநெறிவழியொழுகுதல் வேண்டும் என்ற நினைவில்லாதிருத்தல் ஆகிய இரண்டும் சேர்ந்து ஆகும் ஐந்து செயல்களும் போசதவிரதத்தை மீறி செய்யப் பெறுகின்ற செயல்களாம்.)

(போக-உபபோகப் பொருள்களைத் துறத்தல்)

122. மயக்கங் கொலையஞ்சிக் கள்ளூன் மதுவின்
றுயக்கந் துறக்கப் படும்.

மயக்கங்கொலையஞ்சி—गमन த்துக்கு மயக்கமும் जीवहिंसै
யுமாமென்று भय ந்து
கள்ளூன் மதுவின்றுயக்கந் துறக்கப்படும்—கள்ளு मांसं
தேன் இவை விடப்படுமென்பது. (௱உஉ)

கள் உண்பதனுல் நடந்து செல்லுகின்றபொழுது தன் நினைவிழக்கும் அளவில் மயக்கம் ஏற்பட்டு, அதனுல் பல

வகையான உயிர்களும் துன்புற்று அழியநேரும் என்பதற்கும் புலால், தேன் போல்வனவற்றை உட்கொள்ளுவதனால் ஏற்படும் கொலைத் தொழிலுக்கும் அஞ்சி, அவ்வளவில் மயக்கந் தரத்தக்கதும் கொலைத் தொழிலாம் பெரும் பாவத்திற் குள்ளாக்குவதுமாகிய கள், புலால், தேன் ஆகியவை வெறுத்து ஒதுக்கப்பெற வேண்டியவைகளாம்.)

123. வேப்ப மலரிஞ்சி வெண்ணெ யதம்பழம்
நீப்ப ரிவைபோல் வன.

வேப்பமலரிஞ்சி வெண்ணெ—வேப்பம்பூ, இஞ்சியும்வெண்ணெயும்
அதம்பழம்—அளிஞ்ச பழமும்
நீப்பரிவை போல்வன—
கள்ளு मांस தேனுக்கு समान மென்று விடுவரென்பதாம். (௱உ௩)

(வேப்பம்பூ, இஞ்சி, வெண்ணெய், அழிஞ்சிப்பழம், (அத்திப்பழம் எனினுமாம்) போன்ற பொருள்களும் கள், புலால், தேன் ஆகியவற்றைப் போன்று அஞ்சத்தகு பொருள்களாம் என்று வெறுத்து ஒதுக்கப் பெறவேண்டியவைகளேயாம்.).

(விரத காலம்)

124. இயமங்கள் கால வரையறை யில்லை
நியமங்க ளல்லா வதம்

இயமங்கள்—धर्मव्रतங்கள்
காலவரையறையில்லை—கால நியமமில்லை आयुष्यपर्यन्तं व्रतம் பண்ணுவதாம்
நியமங்களல்லாவதம்—நியமங்களான व्रतமென்பதாம்.
(௱உ௪)

(இன்னின்ன வழியில்தான் இயற்றுதல் வேண்டும் என்கிற கட்டுப்பாடு இல்லாதவனாகிய அறநெறியொழுகும் விரதங்களை மேக்கொள்ளுவதற்குக் காலவரையறை ஏதுமில்லை. ஒவ்வொருவரும் தங்கள் ஆயுட்காலம் முழுவதும் கையாளுதல் வேண்டும்).

(துய்க்கும் பொருள் குறைத்தல்)

125 உடுப்பன பூண்பன பூச்சாந்து ழூர்திப்
படுப்பப் பசியனீ ராட்டு.

உடுப்பன—பிடவையும்
பூண்பன—ஆபரணமும்
பூச்சாந்துமூர்தி—புஷ்பம், சந்தனம், யானை, குதிரை முதலான वाह नமும்
படுப்பப்பசியனீராட்டு—शयनமான கச்சிற்கட்டில் மெத்தையும் स्नानம் பண்ணுகிறதும் (௱உ௫)

(ஆடைகளணிவதும் அணிகலன்கள் பூண்பதும் மலர் சூடுவதும் சந்தனம் பூசுவதும் யானை, குதிரைபோன்ற ஊர்திகளில் ஏறிச் செல்வதும் கட்டிலும் மெத்தையுங் கூடிய படுக்கையில் உறங்குவதும் நீராடுவதுமாகிய அன்றாடச் செயல்களுக்குரிய பொருள்களிலும் அளவும் காலமும் குறைத்துப் பயன்படுத்துவது விரதத்திற்குரித்தாகும்.)

126. கோல மிலைகொடல் நித்த நியமங்கள்
கால் வரையறுத்த நற்கு.

கோலமிலை கொடல்—பாக்கு வெத்திலையும்கூட
நித்தநியமங்கள்—नित्य நியமங்கள்
காலவரையறுத்த நற்கு—காலங்களோடே கூடமட்டுப் பண்ணுகிறதென்பதாம். (௱உ௬)

(மேலே கூறியவற்றை அளவாலும் காலத்தாலும் குறைத்துப் பயன்படுத்துவதோடு வெற்றிலை பாக்கு போன்ற அன்றாடம் துய்க்கும் பொருள்களையும் காலஅளவில் மிகவும் குறைத்துப் பயன்படுத்தல் வேண்டும்.)

(துய்க்கும் காலம் குறைத்தல்)

127. இன்று பகலிரா வித்திங்கள் இவ்வாண்டைக்
கென்று நியமஞ் செயல்.

இன்று பகலிரா—இன்று பகல் ராத்திரி
வித்திங்கள்—இந்த மாதம்
இவ்வாண்டைக்கென்று நியமஞ் செயல்—இந்த வருஷமென்று नियमव्रतம் பண்ணுவதாம். (௱உ௭)

(மேலே கூறப்பெற்ற பொருள்களைக் குறைத்துப் பயன் படுத்துவதோடு கால வரையறையும் மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதன் விளக்கமாவது குறிப்பிட்ட இன்ன ஆண்டுவரை மட்டுமே இவற்றைப் பயன்படுத்துவேன் என்று கட்டுப்பாடு ஏற்படுத்திக் கொள்ளுதல்; அதிலும் குறிப்பிட்ட இவ்விம் மாதங்களில் மட்டுமே இவற்றைத் துய்ப் பேன் என்று உறுதிகொள்ளுதல், அம்மாதங்களிலும் இவ்விவ் நாட்களில் மட்டும், அந்நாளிலும் இரவில் மாத்திரம், பகலில் மாத்திரம் இவற்றைப் பயன்படுத்துவேன் என்றெல்லாம் மேற்கொள்ளும் காலக் கட்டுப்பாடுகளே காலவரையறை என்பதாம்.)

(போக-உபபோக பரிமாண விரதத்தின் இறப்பு)

128. வேட்கை வழி நினைப்பு துய்ப்பு மிகநடுக்கு
நோக்கின்மை யைந்தா மிறப்பு

வேட்கை —தான் व्रत ம் பண்ணின वस्तुवि லே वाञ्छै யும்
வழி நினைப்பு—அந்த वस्तु க்கள் வருகிற வழியை நினைக் கிறதும்
துய்ப்பு—அந்த वस्तु க்களை அனுபவிக்கிறதும்
மிகநடுக்கு—மிகுதியான भय மும்
நோக்கின்மை—व्रत த்தை मनसि ஞலே चिन्तित्तु ப் பாராததும்
யைந்தா மிறப்பு—ஐந்ததீ चार மாம். (௱௨௮)

(தான் இனி இவற்றைத் துய்ப்பதில்லை என்று விரதம் மேற்கொண்ட பொருள்களை மீண்டும் விரும்புதல், அப் பொருள்களைப் பெறுவதற்கான வழிகளில் உள்ளத்தைச் செலவிடுதல், அப்பொருள்களை மீண்டும் அனுபவித்தல், விரதம் மேற்கொள்ளுவதில் மிகுதியான பயங் கொள்ளுதல், விரத முறைகளை மனத்தால் சிந்தித்து உணராதிருத்தல் ஆகிய ஐந்தும் போக உபபோக பரிமாண விரதத்தை மீறி செய்யப்பெறுகின்ற செயல்களாம்.)

(தேசாவகாசிகவிரதம்)

129. தேசம் வரைந்தொழுகல் கால வரையறையிற்
றேசா வகாசிக மென்.

தேசம் வரைந்தொழுகல்—இத்தனை காதம் போவே னென்றும் தேசத்தை மட்டு பண்ணுகிற

காண்டகு காலமெனல்—அதுக்குக் காலநியமமென்று காண்பதாம். (௱௩௧)

(இடம், தேசம் ஆகிய வரையறைகளுக்கு நாளும் மாதமும் ஆண்டும் இவ்வளவே என நியமித்து அதற்கேற்ப கட்டுப்பட்டு ஒழுகுதல் கால வரையறையாகிய கட்டுப்பாடு என்று கூறுவர்.)

132. எல்லைப் புறத்தொழிந்த பாவமு மீண்டமையிற்
புல்லுக நாளும் புரிந்து.

எல்லைப்புறத்தொழிந்த பாவமு மீண்டமையிற் — தான் வரைவு பண்ணிக்கொண்ட தரத்துக்குப் புறம்பு கொலை முதலான பாவமுமில்லாத படியினலே

புல்லுகநாளும் புரிந்து—நாள்தோறும் सन्तोष மாக வரைவு பண்ணுவது. (௱௩௨)

(விரதம் மேற்கொண்டு வரையறை செய்து கொண்ட எல்லைகளுக்குப் புறம்பான இடத்திலே கொலை முதலாகிய ஐம்பாவத்திற்கும் இடமில்லை ஆதலினல் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட எல்லைக்குள் எடுத்துக்கொண்ட உறுதியில் வழுவாதவாறு மகிழ்ச்சியோடு வரையறை செய்து ஒழுகுதல் கடமையாகும்.)

(தேசாவகாசிக விரதத்தின் இறப்பு)

133. கூறல் குணர்தலேவ லுருக்காட்டல்
யாதொன்றும் விட்டேறிதல் கேடு.

கூறல் குணர்தல்—தான்வரைவு பண்ணினத்திற்குப் பிறம்பே मनुष्यரை யனுப்பி वस्तु வை வாங்கிக் கொள்ளுகிறதும்

ஏவல்—எல்லைவரைவு பண்ணினத்திற்கப்பால் मनुष्य ரை யேவி उद्योग ம் பண்ணிவிப்பதும்

உருக்காட்டல் — उद्योगம் பண்ணுகிறவனுக்குத் தன்னுடைய रूपத்தை தோற்றுவிப்பதும்

யாதொன்றும் விட்டேறிதல் கேடு—வரைவான प्रदेश த்திற்கப்பால் கல்லு முதலானதை விட்டெறிகிறதும் अतीचार மாகும். (௱௩௩)

காண்டகு காலமெனல்—அதுக்குக் காலநியமமென்று காண்பதாம். (௱௩௧)

(இடம், தேசம் ஆகிய வரையறைகளுக்கு நாளும் மாதமும் ஆண்டும் இவ்வளவே என நியமித்து அதற்கேற்ப கட்டுப்பட்டு ஒழுகுதல் கால வரையறையாகிய கட்டுப்பாடு என்று கூறுவர்.)

132. எல்லைப் புறத்தொழிந்த பாவமு மீண்டமையிற்
புல்லுக நாளும் புரிந்து.

எல்லைப்புறத்தொழிந்த பாவமு மீண்டமையிற் — தான் வரைவு பண்ணிக்கொண்ட தரத்துக்குப் புறம்பு கொலை முதலான பாவமுமில்லாத படியினாலே

புல்லுகநாளும் புரிந்து—நாள்தோறும் सन्तोष மாக வரைவு பண்ணுவது. (௱௩௨)

(விரதம் மேற்கொண்டு வரையறை செய்து கொண்ட எல்லைகளுக்குப் புறம்பான இடத்திலே கொலை முதலாகிய ஐம்பாவத்திற்கும் இடமில்லை ஆதலினால் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட எல்லைக்குள் எடுத்துக்கொண்ட உறுதியில் வழுவாதவாறு மகிழ்ச்சியோடு வரையறை செய்து ஒழுகுதல் கடமையாகும்.)

(தேசாவகாசிக விரதத்தின் இறப்பு)

133. கூறல் குணர்தலேவ லுருக்காட்டல்
யாதொன்றும் விட்டேறிதல் கேடு.

கூறல் குணர்தல்—தான்வரைவு பண்ணினத்திற்குப் பிறம்பே मनुष्यரை யனுப்பி वस्तु வை வாங்கிக் கொள்ளுகிறதும்

ஏவல்—எல்லைவரைவு பண்ணினத்திற்கப்பால் मनुष्य ரை யேவி उद्योग ம் பண்ணிவிப்பதும்

உருக்காட்டல் — उद्योगம் பண்ணுகிறவனுக்குத் தன்னுடைய रूपத்தை தோற்றுவிப்பதும்

யாதொன்றும் விட்டேறிதல் கேடு—வரைவான प्रदेश த்திற்கப்பால் கல்லு முதலானதை விட்டெறிகிறதும் अतीचार மாகும். (௱௩௩)

(தான்விரதம் மேற்கொண்டு வரையறை செய்து கொண்ட எல்லைக்குப் புறம்பே உள்ள பொருள்களைப் பெறுவான் விரும்பி அவற்றைக் கொண்டு வருதற்குரிய ஆட்களை அனுப்புதலும் அவர்கள் கொண்டுவந்த பொருள்களைப் பெற்றுக் கொள்ளுவதும் வரையறை செய்து கொண்ட எல்லைக்குப் புறம்பே உரிய ஆட்களை அனுப்பி அவர்களுக்குரிய தொழிலில் அமர்த்துவதும் அங்கு தொழில் செய்பவனுக்குத் தன்னுடைய உருவினைக் காட்டி நிற்பதும் அவ்வெல்லைக்கப்பால் கல் முதலிய பொருள்களை விட்டெறிவதுமாகிய ஐந்து செயல்களும் தேசாவகாசிக் விரதத்தை மீறிய செயல்களாம்.)

(அதிதி சம்விபாக விரதம்)

(வையா விரதம்)

134. தானஞ்செயல்வையா வச்ச மறனோக்கி
மானமின் மாதவற்கு நற்கு

தானஞ் செயல்—दान ஞ் செய்கிறதும்
வையாவச்சம்—வையாप्रत्ययமும்
அறனோக்கி—धर्म वருகிற வழியைப் பார்த்து
மானமின் மாதவற்கு நற்கு—மானமில்லாத मुनीश्वर ருக்கு நண்ணுகப் பண்ணுவதாம். (௱௩௪)

(இல்லற ஒழுக்கமுடையவர்கள் தங்கள் இல்லறத்திற்காம் சிறந்த அறநெறி பற்றிய முறைகளை எதிர்நோக்கி, சிறந்த ஒழுக்கமுடையோராகிய முனிசுவரர்களுக்கு, அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருள்களில் எவையேனும் இயன்றதை அளிப்போம் என்று விரதம் பூண்டு அதன்படி தாமே கொடுத்து அவர்களைப் போற்றுதலே இல்லறத்தாருக்குரிய வையாவிரதம் என்று கூறப்பெறும்.)

135. இடர்களைத லுற்றது செய்தலு மாங்கே
படுமென்ப பண்புடை யாற்கு.

இடர்களைதலுற்றது செய்தலுமாங்கே—दुःख ம் வந்தாலதனைத் தீர்க்கிறதும் அன்னியரைக் கொண்டு दुःख ந்தீர பண்ணிவைக்கிறதும்

படுமென்ப பண்புடையாற்கு— गुण முள்ளபேர்களுக்கு तात्पर्य மாகப் பண்ணப்படுமென்பதாம். (௱௩௫)

(சிறந்த துறவியருக்கு ஏதேனும் துன்பம்வந்த காலத்து அத்துன்பத்தினைத் தாமே தீர்த்து வைப்பதும், தம்மாலிய லாத காலத்து உரியோராகிய பிறரைக்கொண்டு அத்துன் பத்தினைப் போகச் செய்வதும் தம்மாலியன்ற பொருள்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கொடுத்தலும் சிறந்த பண் புடையவர்களாகிய இல்லறத்தாருக்கு உரித்தாகும் என்பர்.)

(உத்தம தானம்)

136. உத்தமர்க் கொன்பது புண்ணியத்தா லீவது
உத்தம தான மெனல்.

உத்தமர்க்கொன்பது புண்ணியத்தாலீவது — உத்தம பாத்திரமான मुनीश्वर ருக்கு नवपुण्यक्रम த் தால் கொடுப்பது

உத்தம தானமெனல்—உத்தம दान மென்பதாம். (௱௩௬)

(முறையோடு எதிர்கொள்ளுதல், பணிதல், இருக்கை ஈதல், கால் கழுவுதல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டுதல், புகழ்தல், உண்டிஈதல் என்னும் ஒன்பது வகையான புண்ணிய முறைகளினால், சிறந்த உத்தமர்களா கிய முனீசுவரர்களுக்குக் கொடுத்து உதவுவது. சிறந்த தானம் ஆகும், (உத்தம தானம்) என்று கூறுவர்).

137. உத்தம தானந் தயாதானந் தம்மளவில்
வைத்துழியான் செய்க வுவந்து.

உத்தமதானந்தயாதானந்தம்மளவில்—உத்தம दान மும் दयादान மும் தன் शक्ति க்குத்தக்க மாத் திரம்

வைத்துழியான்செய்க வுவந்து—பரவசந் தப்பாமல் பண் ணுவதாம். (௱௩௭)

